
பக்கங்கள் 16+4

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 14 திங்கட்கிழமை 27.05.2024 அதிர்வு 301


## பாடசாலைக்கு அருகில் துப்பாக்கிப் பிரயோகம்



மாத்தறை - வெலிகம பிரதேசத்தில் பாடசாலைக்கு அருகில் இன்று காலை துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

04




# துரோகிப் பட்டத்துக்குப் பயந்து உண்மையை மறைக்கமாட்டேன்

## யாழில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

**”2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தானே. யாராவது ஒருவர் என்னைத் துரோகி என்று சொல்லி விடுவார் எனப் பயந்து உண்மையை வெளிப்படையாகச் சொல்வதற்கு நான் எப்போதுமே பயப்படுபவன் அல்லன்.”**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

“2005 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவின் பயணத்துக்கு வடக்கு மக்கள் தடையாக இருந்திருக்கலாம். அதை வட பகுதி மக்கள் சில வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என நினைக்கின்றேன்.“ - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சில தினங்களுக்கு முன்னர் சுமந்திரன் எம்.பி. கூறியிருப்பது தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மாகாணம் வாக்களிக்கவில்லை. ஆனாலும், கிழக்கு மாகாணம் வாக்களித்தது.

04

## தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் ஜூன் 9 இல் பகிரங்கக் கருத்துப் பரிமாற்றம்

**(எஸ்.நிதர்ஷன்)**

CLICK HERE VIDEO

“ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் சம்பந்தமாக எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பொது வெளியில் பகிரங்கமாக ஆரோக்கியமான முறையில் கருத்துப் பரிமாற்றம் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.”

- இவ்வாறு யாழ். ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

04

## தெற்கில் மற்றுமொரு கூட்டணியும் உதயம்



தெற்கு அரசியலில் மற்றுமொரு புதிய கூட்டணி உதயமாகியுள்ளது.

மவ்பீம ஜனதாக் கட்சியின் தலைவரும் பிரபல வர்த்தகருமான திலித் ஜயவீர, பல அரசியல் குழுக்களுடன் இணைந்து புதிய கூட்டணியை அறிவித்துள்ளார்.

04






# பேசாலையில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அகழ்வுப் பணி

## ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார், பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகன் கோயில் காட்டுப் பகுதியில் இன்று காலை அடையாளம் காணப்பட்ட இடத்தில் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அகழ்வு நடவடிக்கை இடம்பெற்றது.

எனினும், குறித்த அகழ்வு நடவடிக்கைகளின்போது எவ்வித பொருட்களும் மீட்கப்படவில்லை.

பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகன் கோயில் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் புதையல் தோண்டினர் எனக் கூறப்படும் நிலையில் கடற்படை அதிகாரி ஒருவர் உள்ளடங்களாக 8 பேர் கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து ஸ்கேனர் இயந்திரம் உள்ளடங்களாக புதையல் தோண்டப் பயன்படுத்திய பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.

பேசாலை பொலிஸார் மேற்படி 8 பேரையும் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த நபர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், இன்று காலை பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகன் கோயில் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் புதையல் தோண்டினர் எனக் கூறப்படும் இடத்தில் அகழ்வுப் பணியை முன்னெடுக்க பேசாலை பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய நீதிவான் அனுமதி வழங்கினார்.

இன்று காலை மன்னார் நீதிவானின் உத்தரவுக்கமைவாக அந்தப் பகுதியில் அகழ்வு நடவடிக்கை இடம்பெற்றது.

மன்னார், பேசாலை பொலிஸார் மற்றும் உரிய திணைக்கள அதிகாரிகள் இதன்போது கலந்துகொண்டிருந்தனர். எனினும், அந்தப் பகுதியில் பெக்கோ இயந்திரம் பயன்படுத்தி அகழ்வுப் பணிகள் நடைபெற்றபோது எவ்வித பொருட்களும் மீட்கப்படவில்லை.

எனினும், அகழ்வுப் பணியின் போது புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்க ஊடகவியலாளர்களுக்குப் பேசாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அனுமதி வழங்கவில்லை.

இதேவேளை, மன்னார் நீதிமன்றத்தில் மீண்டும் இன்று ஆஜர்படுத்திய மேற்படி 8 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.





# கேகாலை மாவட்டத்தில் அடுத்த முறை தமிழ் எம்.பி.

## தெரிவாவாவர் என்ற நம்பிக்கை பிறக்கின்றது என ஐ.ம.மு. மாநாட்டில் தலைவர் மனோ எம்.பி. சூளுரை








"கேகாலை மாவட்டத்தில் கடந்த தேர்தலில் சில ஆயிரங்களால் கை தவறிப் போன எம்.பி. பதவி அடுத்த முறை கைகூடும் என்ற நம்பிக்கை பிறக்கின்றது. "ஒன்றிணைந்து வெல்வோம், தேசிய அரங்கில் இடம்பெறுவோம்" என்ற கோஷம் கேகாலை மாவட்டம் முழுக்க ஒலிக்கின்றது. இது ஜனநாயக மக்கள் முன்னணியின் மாவட்டம் தழுவிய கட்டமைப்பு மாநாடு."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியின் கேகாலை மாவட்ட மாநாடு, மாவட்ட அமைப்பாளர் பரணீதரன் முருகேசு ஏற்பாட்டில், எட்டியாந்தோட்டையில் தலைவர் மனோ கணேசன் தலைமையில் நடைபெற்றது இதில் கேகாலை ஐக்கிய மக்கள் சக்தி எம்பிகள் கபீர் ஹசீம், சுஜித் பெரேரா, கூட்டணி பிரதி தலைவர்கள் திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் மற்றும் வேலு குமார் எம்.பி. ஆகியோர் உட்பட கட்சி, கூட்டணி அரசியல் குழு உறுப்பினர்களும், விசேட அழைப்பாளர்கள், அங்கத்தவர்கள் கலந்துகொண்டார்கள். இதில் தலைமை உரை ஆற்றிய மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:––

"இங்கே பெருந்தொகையில் கூடி இருக்கும் நீங்கள் சும்மா அழைத்து வரப்பட்டவர்கள் அல்ல, என்பதை மேடையில் அமர்ந்துள்ள நண்பர்கள் கபீர் ஹசிம், சுஜித் சஞ்சய் பெரேரா ஆகியோருக்கு சொன்னேன். கேகாலை மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளில், அனைத்து தோட்ட பிரிவுகளில், அனைத்து நகர பிரிவுகளில் அமைந்துள்ள எங்கள் அமைப்பாளர்களின் தலைமையிலான கட்சி வலை பின்னலான செயற்குழு உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் என்னிடம் இதோ இங்கே என் கையில் உள்ளது.

"மலைநாடு" என்பது புவியியல் அடையாளம். "மலையகம்" இனவியல் அடையாளம். ஆகவே, மலையகம் என்பது நுவரெலியா மாத்திரம் அல்ல. நூரளையையும் உள்ளடக்கி கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கொழும்பு, பதுளை, மாத்தளை, கம்பஹா, மொனராகலை, காலி, மாத்தறை, குருநாகலை இன்னும் பல மாவட்டங்களில் பரந்து வாழும் தமிழர்களின் அரசியல் அடையாளம். எமது இந்தக் கேகாலை மாவட்ட கட்டமைப்பு மாநாடு இந்த மகத்தான உண்மையை அரங்கேற்றியுள்ளது. ஆகவே, இன்று இங்கே அமைப்பு ரீதியாக அடி எடுத்து வைத்து விட்டோம். இனி நிற்க நேரமில்லை.

தேர்தல் வேளையில் சென்னை தொலைகாட்சிகளில்முழுநாளும்சினிமா பார்க்காதீர்கள். அன்றைய நாளை விடுமுறை விருந்து தினமாக கருதி செயற்படாதீர்கள்.

(நான்காம் பக்கம் பார்க்க)



### கேகாலை மாவட்டத்தில்...

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் விளைவுதான் சில ஆயிரக் கணக்கானோர் வாக்களிக்கத் தவறியதால், எமது பிரதிநிதித்துவம் கைதவறிப் போனது. அந்தத் தொலைகாட்சிகளில் மெட்னி ஷோ, ஈவினிங் ஷோ, நைட் ஷோ, பின் மோர்னிங் ஷோ பின் மீண்டும் மெட்னி ஷோ. இதில் ரஜனிகாந்த் வருவார். அஜித் குமார் வருவார். விஜய் வருவார். ஆனால், நாளை உங்களுக்கு துன்பம், துயரம் வரும் போது, ரஜனிகாந்த், அஜித் குமார், விஜய் ஆகியோர் வர மாட்டார்கள்.

உங்களுக்காக நான்தான் வர வேண்டும். நாம்தான் வர வேண்டும். ஏனெனில், அவர்கள் சினிமா ஹீரோ. நான் நிஜ ஹீரோ. உங்களுக்காக பிரச்சினை என்றால் ஓடோடி வருகிறேன். இப்படி நான் நாடு முழுக்க போக வேண்டியுள்ளது. இனிமேல் நீங்கள் உங்கள் மாவட்ட மண்ணின் மைந்தன் ஒருவனை தெரிவு செய்ய வேண்டும். அது உங்களை உரிமை. வாழ் நாள் முழுக்க வாக்கு கேட்டு வருபவர்கள் எல்லோருக்கும் வாக்கு கொடுத்து விட்டு மேலே பார்த்துக்கொண்டு நிற்க முடியாது.

நம்பர் கபீர் ஹஷிம் எனது கண்ணியமான நண்பர். அவருக்கு நாம் எமது விருப்பு வாக்கு ஒன்றை வழங்குவோம். அவருக்கு அதிக எண்ணிக்கையான விருப்பு வக்குகள் கிடைக்கும் போது அவர் பலமிக்க அமைச்சர் ஆவார். அதேவேளை அவர் அவரது ஆதரவு வாக்காளர்களிடமிருந்து எமக்கு ஒரு விருப்பு வாக்கு வழங்க விரும்புகிறார். ஆகவே நாம் வாக்குகளை பகிர்ந்து கொள்ளுவோம்.

அதேபோல். என் இளமை கால நண்பர் சுஜித் சஞ்சய் பெரேராவுக்கும் நாம் நாம் எமது விருப்பு வாக்கு ஒன்றை வழங்குவோம். அவரையும் நாம் பல மிக்க அமைச்சர் ஆக்குவோம். அவரும் அவரது ஆதரவு வாக்காளர்களிடமிருந்து எமக்கு ஒரு விருப்பு வாக்கு வழங்க விரும்புகின்றார். ஆகவே நாம் வாக்குகளை பகிர்ந்து கொள்ளுவோம்.

இது கட்சி தலைவர் என்ற முறையில் எனது கனவுத் திட்டம். இப்படித்தான் நாம் கேகாலை மாவட்டத்தில் கடந்த தேர்தலில் சில ஆயிரங்களால் கை தவறிப்போன எம்.பி. பதவியை, இம்முறை பெறுவோம். எனது கனவை நனவு ஆக்குங்கள். அது உங்கள் கைகளில் இருக்கின்றது. கேகாலையின் எட்டியாந்தோட்டை நான் பிறந்த ஊர். ஆகவே, கேகாலையின் வெற்றி எனது தனிப்பட்ட வெற்றியும் கூட என்பதையும் மறவாதீர்கள்.” – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ்ப் பொதுவேட்பாளர்...

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:-

“கடந்த சில நாட்களுக்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் சந்திப்பொன்றை நான் மேற்கொண்டிருந்தேன். அதாவது தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது சம்பந்தமாக முனைப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற சிவில் சமூகத்தினர், பத்தி எழுத்தாளர்கள் என்னைச் சந்திக்க வேண்டுமெனக் கேட்டிருந்தார்கள். அவர்களோடு நிறைவான கருத்து மிக்க கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

தமிழ்ப் பொது வேட்பாளர் யோசனைக்கு மாறாக நான் தெரிவித்த கருத்துக்கள் சம்பந்தமாக அதனுடைய காரணங்களை எடுத்துச் சொல்லியிருந்தேன். இந்தச் சூழ்நிலையிலே இப்படியான தொரு முன்னெடுப்பு செய்வதற்கான தங்களுடைய காரணங்களையும் அவர்கள் எங்களுக்கு எடுத்துச் சொல்லியிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தின் இறுதியில் இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் பொது வெளியில் பகிரங்கமாக ஆரோக்கியமான முறையிலே கருத்துப் பரிமாற்றம் செய்வது நல்லது என்கின்ற என்னுடைய யோசனையை நான் சொன்னபோது அவர்களும் அதனை முழு மனதோடு ஏற்றுக்கொண்டார்கள்.

சென்ற வாரம் அல்லது நேற்றைய தினம் அப்படியொரு கூட்டத்தை ஒழுங்கு செய்ய நான் நினைத்திருந்தாலும் கூட சில பல காரணங்களினாலே அது பிற்போடப்பட்டிருக்கிறது.

இப்போது வருகின்ற ஜூன் மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலையில் யாழ்ப்பாணத்தில் பாரியளவிலான கூட்டமொன்று இரு தரப்பு நியாயங்களையும் ஆரோக்கியமான முறையில் கலந்துரையாடும் வகையில் செய்வதற்கு நான் ஒழுங்கு செய்திருக்கின்றேன்.

இரு தரப்பில் இருந்தும் சிலரை அந்தக் கட்டத்தில் தங்களுடைய கருத்துக்களை முன்வைக்குமாறு அழைப்பு விடுத்திருக்கின்றேன்.

அப்படியான உரையாடல் நடைபெறுவது நல்லது. ஏனென்றால் பொது மக்களுக்கும் இதனுடைய சாதக பாதகங்களை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். இதைக் குறித்து மக்களுடைய மனதிலே எப்படியான சிந்தனைகள் இருக்கின்றதென்பதையும் நாங்களும் ஒரு அளவுகோலிட்டு அறியக் கூடியதாக இருக்கும்.

ஆகவே, ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசாமல் இதற்குப் பின்னணியில் இது இருக்கின்றது, அதற்குப் பின்னணியில் அது இருக்கின்றது என்ற இந்தப் பின்னணிக் கதைகள் எல்லாம் விடுத்து சரியான விதத்தில் ஒரு கருத்துப் பரிமாற்றம் செய்வது நல்லது. அதற்கான ஒரு சூழலை நாங்கள் உருவாக்குகின்றோம். எனவே, தயவுகூர்ந்து அனைவரும் அந்த ஒரு ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்ற சூழலைப் பேணுமாறு மிகவும் அன்போடு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படியான விடயங்களிலே நாங்கள் எடுக்கின்ற தீர்மானங்கள் மக்கள் சார்ந்ததாக இருக்க வேண்டும். அதிலே மக்களுடைய பங்களிப்பும் இருக்க வேண்டும். ஆகவே, இந்த விடயத்தை நாங்கள் ஒரு முன்னுதாரணமாக வைத்து ஜனநாயக வழியிலே எப்படியான கருத்துப் பரிமாற்றங்களை வெளிப்படைத் தன்மையோடு பேச முடியும் என்பதையும் இதன் மூலம் நாங்கள் வெளிப்படுத்த முடியும். ஆகையினாலே அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.” – என்றார்.

### விடுதலைப்புலிகளின்...

கிழக்கு மாகாண மக்களுக்கும் அந்த அறிவித்தல் (ஜனாதிபதித் தேர்தல் புறக்கணிப்பு) கொடுத்தாலும் அங்கு மக்கள் வாக்களித்தனர்.

ஏனென்றால் அதை அமுல்படுத்துகின்ற அதிகாரம் அந்தப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இருக்கவில்லை. ஆனால், புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் மக்கள் வாக்களிக்கவில்லை. எனினும், ஒருசிலர் வாக்களித்தவர்கள் என நினைக்கின்றேன்.

வாக்களித்த ஒரு சிலரும் அந்தநேரம் நூறுவீதம் ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் வாக்களித்தார்கள். ஆனபடியால் மக்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் யாருக்கு அந்த வாக்குப் போயிருக்கும் என்பதில் எவருக்கும் எந்த விதமான சந்தேகமும் இதுவரையில் இருந்ததில்லை.

ஆனால், இன்றைக்கு ஊடகவியலாளர்களான நீங்கள்தான் இப்படியான சந்தேகத்தை எழுப்புகின்றீர்கள். எல்லோருக்கும் தெரிந்த ஒரு விடயத்தைக் கதைப்பதற்குப் பயந்து இதைச் சொன்னால் துரோகி என்று சொல்லிவிடுவீர்கள் எனக் கருதி ஊடகவியலாளர்களே பயந்திருக்கின்ற ஒரு சூழலைத்தான் இன்றைக்கு இங்கு கேட்கின்ற கேள்வி காட்டுகின்றதே தவிர எப்படி வாக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் என்பது தொடர்பில் மக்களுக்கு மிகத் தெளிவு இருக்கின்றது.

எனினும், நான் எப்போதுமே யாராவது ஒருவர் என்னைத் துரோகி என்று சொல்லிவிடுவார் எனப் பயந்து உண்மையைச் சொல்வதற்குப் பயப்பட்டதில்லை என்பதையும் கூறிக்கொள்கின்றேன்.” – என்றார்.

### பாடசாலைக்கு...

மற்றுமொரு துப்பாக்கிச்சூட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை இலக்கு வைத்து குறித்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

எனினும், இதனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

### தெற்கில்...

சர்வஜன பலய என்ற புதிய கூட்டணி கொழும்பில் இன்று காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணி சார்பில் விமல் வீரவன்ச, ஜனநாயக இடதுசாரி முன்னணி சார்பில் டி.வி.டி.திலக சிறி, பிவித்துரு ஹெல உறுமய சார்பில் உதய கம்மன்பில, மவ்பிம ஜனதாக் கட்சி சார்பில் திலித் ஜயவீர, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஜி.வீரசிங்க, யுதுகம தேசிய அமைப்பு சார்பில் கெவிந்து குமாரதுங்க ஆகியோர் புதிய கூட்டணிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.





# ஜனாதிபதி தேர்தலில் வாக்குகள் கொள்ளை போக தமிழ், முஸ்லீம் இளைஞர்கள் இடமளிக்காதீர்கள்!

## நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

(கனகராசா சரவணன்)

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை கொள்ளையடிக்கின்றனர். எனவே தமிழ் மக்கள் மிகவும் புத்திசாலித்தனமாகத் தீர்மானம் எடுக்க வேண்டும். அதேவேளை தமிழ், முஸ்லீம் இளைஞர்களிடம் விசேடமாக கேட்பது ஒன்றுதான். மிகவும் புத்திசாலித்தனமாகக் கலந்துரையாடி அரசியல் தீர்வுகளை எடுப்பதுடன் உங்கள் வாக்குகளை கொள்ளையடிக்க இடம் கொடுக்க வேண்டாம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனை கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனை கட்சியின் கலந்துரையாடல் நாமல் ராஜபக்ஷவின் மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார் தலைமையில் ஈஸ்லகுன் விடுதியில் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை (25) இடம்பெற்றது. இதன்போது அவர் ஊடகங்களுக்கு கருத்த தெரிவிக் கையில் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மிகலும் புத்திசாலித்தனமாக தீர்மானம் எடுக்கவேண்டும். ஏன் ஏன்றால் ஒவ்வொரு நாளும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை கொள்ளையடிக்கின்றனர். பிரதேசத்திலுள்ள அரசியல்கட்சிகள் மக்களின் வாக்குகளை தமது தேவைக்குப் பாவிக்கின்றனர்.

அரசியல் யாப்பின்படி ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். அந்த தேர்தலில் எமது கட்சி வேட்பாளராக தமிழ், சிங்கள், முஸ்லீம், பறங்கிய, மலேய மக்களால் பிடிக்க கூடிய ஒருவரையே வேட்பாளராக முன்னிலைப்படுத்துவோம்.

வரலாற்றை எடுத்துக் கொண்டால் மந்திரிமார், அமைச்சர்மார் போன்ற உரிய அரசியல் வாதிகளுக்கு எந்த பிரச்சினையும் வந்ததாக இல்லை.

தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து அபிவிருத்தி வேலை செய்தது மகிந்த ராஜபக்ஷவே. அவருக்கு வாக்குகள் அளித்தாலும் அளிக்காவிட்டாலும் இந்த நாட்டில் வாழும் தமிழர்களோ, சிங்கள வர்களோ, முஸ்லீம்களோ, பறங்கியர்களோ எல்லோரும் ஒரே நாடு என்று அவர் அபிவிருத்தி செய்தார்.



நல்லாட்சி காலத்தில் இலங்கை முழுவதும் அபிவிருத்தி முடக்கப்பட்டது. அந்த ஆட்சிக் காலத்தில்தான் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. கோட்டபாய ராஜபக்ஷ ஆட்சியில்தான் அந்தக் கெட்ட பெயர் வந்தது.

நல்லாட்சிக் காலத்தில் அபிவிருத்தி வேலைகள் முடக்கப்பட்டுக் கைத் தொழில்கள் முடக்கப்பட்டு சகல வேலைகளும் நிறுத்தப்பட்டதால் தான் கோட்டபாய ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் அந்த சவாலுக்க முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இதன் பிறகு நல்லாட்சி காலத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஏற்பட்டதையடுத்து ஆட்சி பொறுப்பை கோட்டபாய பெறுப்பேற்ற போது கொவிற் 19 ஏற்பட்டது அப்போது மட்டக்களப்பிற்கு அதிகமான தடுப்பூசியை வழங்க நடவடிக்கையை மேற்கொண்டு ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர், வைத்தியர்கள, சுகாதார உத்தியோகத்தர்கள், விவசாயிகள் உட்பட அனைவருக்கும் வழங்கினோம் இந்த நிலையில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலை ஏற்பட்டது .

அதன் காரணமாக எங்களிமிருந்து ஆட்சி அதிகாரம் இடைநடுவில் மாற்றப்பட்டது. அதனால் ரணில் விக்கிரம சிங்கவை அடுத்த இரண்டு வருடங்களுக்கு ஜனாதிபதியாக நியமித்தோம்.

எங்களுக்கு கிராம மட்டத்தில் போதியளவு அபிவிருத்திகள் செய்யப்படாவிட்டாலும் ஓரளவுக்கு நகர்ந்து கொண்டிருக்கின்றது. இனிவரும் தேர்தலுக்கு நாங்கள் முகம் கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. மட்டக்களப்பில் கட்சியில் இருக்கும் முக்கியஸ்தர்கள் எங்கள் ஆணிவேர்கள். எனவே எதிர் காலத்தில் கட்சியை முன்னெடுக்க நீங்கள்செயற்படுவீர்கள்என நம்புகின்றேன்.

அதேவேளை வியாபாரத்துறையில் வரிப்பிரச்சினை பட்டதாரிகள் பிரச்சினை உட்பட சகல துறைகளிலும் குறைபாடுகள் இருக்கின்றன. கோட்டபாய ஆட்சிக்கு பிறகு பட்டதாரிகள் நியமனம் வழங்கப்படவில்லை. தனியர்துறையில் தொழில் ஊக்குவிப்பு இல்லை.

எனவே நாங்கள் இதைக் கட்டம் கட்டமாக நிறைவேற்றிக்கொள்ள ஒரு ஆளுமையான ஆட்சியை உருவாகி கொள்ளவேண்டும். தேர்தல் காலங்களில் இருக்கின்றவர்கள் தேர்தல் முடிந்த பின்னர் இல்லாமல் போய்விடுகின்றனர்.

எங்கள் பிரதேசத்திலும் தேர்தல் காலத்தில் ஒவ்வொரு தலைப்பில் வருகின்றனர். பின்னர் தேர்தல் முடிந்ததும் மாயமாகி விடுவார்கள். எனவே எங்களுடைய கட்சியில் வெற்றிபெற்று ஒருவரைத் தாருங்கள். அப்போது அவருக்கு அதிகபட்ச உதவிகளை செய்து குறைபாடுகளை நிவர்த்தி செய்து எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தை நல்லதோரு பயணத்துக்கு ஏற்பாடு செய்யமுடியும்.– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தெற்கில் புதிய கூட்டு

மிகவும் ஆபத்தான அரசியல் கூட்டணி ஒன்று தென்னிலங்கையில் உருவாகியிருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான பிவித்துரு ஹெல உறுமய மற்றும் பல சிவில் அமைப்புகள் இணைந்து 'சர்வஜன பலய' என்ற புதிய அரசியல் கூட்டணியை உருவாகியுள்ளன.

கொழும்பில் இன்று காலை கூட்டணி அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் இந்தத் தரப்பினர் கையெழுத்திட்டுள்ளனர்.

தென்னிலங்கையில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தும் 'தெரண' ஊடகக் குழுமத்தின் தலைவரும் மௌபிம ஜனதா கட்சியின் தலைவருமான திலிப் ஜயவீரவும் இந்த கூட்டில் சங்கமித்துள்ளார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண தலைமையிலான சுயேச்சை மன்றம் ஆகியவை இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இன்று உருவாகி உள்ள புதிய கூட்டணி தொடர்பில் ஒரு விடயம் அவதானிக்கத் தக்கது.

2019 க்கு முன்னர் கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்திற்குக் கொண்டு வருவதற்கு குத்தி முறிந்த பௌத்த - சிங்களப் பேரினவாத தரப்புகளே இப்போது தமக்குள் புதிய வடிவத்தில் கூட்டு சேர்ந்து இருக்கின்றன என்பதுதான் அது.

இந்தத் தரப்பில் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றோரின் பேரினவாதப் போக்கு வெட்ட வெளிச்சமானது. நாட்டில் இன்று பேரினவாத உச்ச வெறிப்போக்கில் துள்ளிக் குதிப்பவர்களிடையே இவர்கள் இருவருக்கும் முக்கிய இடம் உண்டு.

அடுத்தவர் - பேராசிரியர் சன்ன ஜயசுமண. கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவருக்கு வலதுகரமாக விளங்கியவர். சிறுபான்மையினருக்கு எதிரான மோசமான கொள்கைப் போக்கை தனது ஆட்சி காலத்தில் கோட்டாபய ராஜபக்ஷ கடைப்பிடிப்பதற்கு இவரின் அழுத்தமும் தூண்டுதலுமே பிரதான காரணம் என்று கருதப்படுகிறத. கோட்டாபயவின் பேரினவாதச் செயற்போக்குக்குத் தோன்றாய்த் துணையாய் நின்று முண்டு கொடுத்துத் தூண்டியவர் இவர்தான்.

உலகம் முழுவதும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை புதைக்கவும் முடியும் என்ற ஒழுங்கு நடைமுறையில் இருந்த போதும் இஸ்லாமியர்களினதும் கிறிஸ்தவர்களினதும், ஜனாஸாக்கள் மற்றும் சடலங்களை வல்வந்தமாக எரிக்கும் தீவிர - கொடூர - கட்டுப்பாடு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தச் செய்ததில் கோட்டாபய ஆட்சி பீடத்தில் இவரது பங்களிப்பே பிரதானமானது என்று சுட்டப்படுகின்றது. அவரும் புதிய பேரினவாத ஒன்று திரள்வில் அணி சேர்ந்திருக்கின்றார்.

'தெரண' ஊடகக் குழுமத்தின் தலைவர் திலீப் ஜயவீரவும் கோட்டாபயவின் வலது கரமாகத் திகழ்ந்தவர்தான். இப்போது ஜனாதிபதித் தேர்தலில் குதிக்கும் எண்ணத்தில் மௌபிம ஜனதா கட்சியைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, தேர்தலுக்குத் தயாராகின்றார்.

மேற்படி புதிய இனவாத கூட்டின் வேட்பாளராக திலீப் ஜயவீர இந்த ஜனாதிபதி தேர்தல் களத்தில் நுழையக் கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

அப்படி நடந்தாலும் நல்லது.

இன்றைய நிலையில் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் பிரதான கட்சிகளின் மூன்று வேட்பாளர்கள் உள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க.

இந்த மூவரில் ஒருவருக்கே வெற்றி வாய்ப்பு என்று சிந்திக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இந்த மூன்று தரப்பும் கடைசி நேரத்தில் வாக்குத் திரட்டும் சூழ்ச்சியாக - வெற்றி இலக்குக்காக - ஆளாளுக்குப் போட்டி போட்டுக் கொண்டு, பௌத்த - சிங்களப் பேரினவாதப் பிரச்சாரத்தை கையில் எடுக்க கூடும் என அஞ்சப்படுகிறது.

அந்தப் பொறுப்பை - பேரினவாத வெறியைக் கிளப்பி, அதில் வாக்குச் சுருட்டும் சூத்திரத்தை - மேற்படி மூன்று பிரதான கட்சிகளின் வேட்பாளர்களும் அல்லாத ஒரு தரப்பு கையில் எடுத்தால், மூன்று பிரதான வேட்பாளர்கள் பக்கத்தில் இருந்தும் பேரினவாதத்தை கிளப்பும் போக்கு சற்றுத் தணிந்து அடங்கிக் காணப்படும் என்பது கண்கூடு.

நாட்டில் பேரினவாதத்தைக் கிளப்பும் தரப்புகளை பிரதான கட்சிகள் தள்ளி வைத்துச் செயற்படும் ஒரு சூழல் இந்த புதிய கூட்டால் ஏற்படுவது வரவேற்கத்தக்க ஒன்றுதான். கழிசடைகளை ஒரு புறம் ஒதுக்குவது நல்லதுதானே...!



# போதைப் பொருளை புறக்கணிப்போம் என்னும் தொனிப் பொருளில் மரதன்!

(மன்னார் )

போதைப் பொருளைப் புறக்கணித்து இயற்கையின் பசுமை பேணுவோம் எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வருடாந்தம் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் விழிப்புணர்வு மரதன் ஓட்டப் போட்டி சனிக்கிழமை (25) காலை மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் நலன் புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் உதவியுடன் மன்னார் மாவட்டச் செயலகத்தின் அனுமதியுடன் மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி தலைமையில் இந்த மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பமானது.

இதன் போது விருந்தினராக வட மாகாண முன்னாள் பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், மன்னார் உதவி மாவட்டச் செயலாளர் டிலிசன் பயஸ், வைத்தியர் ஜோகேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

16 வயதுக்கு மேற்பட்ட ஆண் போட்டியாளர்கள் 36 பேர் இந்த மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டனர்.

இதன் போது முதலாம் இடத்தை மன்னார் சாந்திபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஜே.ஜெபகுமார், 2 ஆம் இடத்தை முருங்கனைச் சேர்ந்த ஏ.அனான்சன், 3 ஆம் இடத்தை காத்தான் குளம் கிராமத்தைச் சேர்ந்த கே.தீசன், 4 ஆம் இடத்தை எருக்கலம் பிட்டி கிராமத்தைச் சேர்ந்த என்.எம்.நிப்ரான், 5 ஆம் இடத்தை ஆண்டாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஜே.துவாரகன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். அவர்களுக்கான பண பரிசில்கள் விருந்தினர்களின் வழங்கப்பட்டன.முதல் 10 இடங்களை பெற்ற வீரர்களுக்குப் பணப் பரிசில்கள் வழங்கப்பட்டன.







# வல்வெட்டித்துறைப் பிரதேச ஆஸ்பத்திரிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் குடி தண்ணீர்

## 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் திட்டம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதன் திறப்பு விழா நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை சம்பிரதாய பூர்வமாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வு வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பு வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதியை நிகழ்வின் பிரதம விருந்தினரும், சந்நிதியான் ஆச்சிரம முதல்வருமான கலாநிதி



மோகனதாஸ் சுவாமிகள் நாடாவை வெட்டித் திறந்து வைத்ததுடன் பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து மங்கல சுடர் ஏற்றலுடன் மண்டபத்தில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்களான ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சிவநாதன், கரவெட்டி வைத்தியசாலை வைத்திய அதிகாரி வே.கமலநாதன், வல்வெட்டித்துறை பிரதேச வைத்திய சாலை அதிகாரிகள், தாதியர்கள், மற்றும் ஊழியர்கள், வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகிகள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# ஆறுமுகம் தொண்டமானின் நினைவு நாளில் அன்னதானம்

(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் மறைந்த தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருகோணமலை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்தில், இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் விசேட பிரார்த்தனைகளும், முதியோர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.





# தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை பூரணமாக பயன்படுத்துங்கள்!

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தற்போது நிலவும் அசாதரண காலநிலை மாற்றம் காரணமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பருவப்பெயர்ச்சி மழையால் நாட்டின் பல பாகங்களிலும் டெங்கு காய்ச்சல் தீவிரமாக பரவும் சாத்தியக்கூறு உள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர், விஷேட வைத்திய நிபுணர் டாக்டர் சதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று முதல் ஜூன் மாதம் முதலாம் திகதிவரை அரசு நாடு தளுவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வாரத்தை பிரகடனப்படுத்தியுள்ளது.

அதனடிப்படையில் பாடசாலை ஆரம்பித்ததும் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோஸ்தர்கள், பெற்றோர்கள் பாடசாலை வளாகத்தை சிரமதான அடிப்படையில் சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், மத ஸ்தாபனங்கள், அரபுக் கல்லூரிகள், புதிதாக நிர்மாணிக்கப்டும் கட்டடப் பகுதிகள், வெற்று வளவுகள், கடற்கரையோரம் நிறுத்தப்பட்டுள்ள தோணிகள், படகுகள், பயன்படுத்தப்படாத வீடுகள், கிணறுகள் மற்றும் நீர்த்தாங்கிகள் என்பனவற்றை சுத்தம் செய்யுமாறும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன.



பொது சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனைக்காக தங்களிடம் வரும் போது அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




# போதை வேண்டாம் என்னும் தொனிப் பொருளில் நடைபவனி

(எஸ். கீதபொன்கலன்)

போதை வேண்டாம் என்று கூறுவோம் என்னும் தொனிப்பொருளில், திருகோணமலை மாவட்ட பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், வாழும் கலை அமைப்பு என்பவற்றின் ஏற்பாட்டில் திருகோணமலை உட்துறைமுக வீதியில் நடைபவனியும், கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் செயற்பாடுகளும் நடைபெற்றன.

கிளிநொச்சி – இங்கிலாந்து மக்கள் சங்கத்தால் இங்கிலாந்து, ஸ்கொட் லாந்து நகரில் நடைபெறும் மரதன் ஓட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இந்த நிகழ்வு நடைபெற்றது என்று ஏற்பாட் டாளர்கள் கூறினர்.

கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத் தலைவர் மதனவாசன் இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத் தார்.








EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA



# தென்னம்படல் மறைப்பு நூல் வெளியீட்டு விழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கவிஞர், ஜனரஞ்சக எழுத்தாளர் கல்முனை றிஸ்வியூ முஹம்மத் நபீல் எழுதிய "தென்னம்படல் மறைப்பு" அழியாத நினைவின் தடங்களை சாணம் மெழுகிய திண்ணையின் நடுவிலமர்ந்து கேட்க வாருங்கள் நூல் வெளியீட்டு விழா கல்முனை ஆஸாத் பிளாசா மண்டபத்தில் நடை பெற்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் கவிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள் மற்றும் வர்த்தக பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.








# பிரிகேட்கள் - படையலகுகளுக்கு இடையிலான கபடிப் போட்டிகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

56 ஆவது காலாட் படைப்பிரிவு, 561 ஆவது காலாட் பிரிகேட் மற்றும் 16 ஆவது இலங்கை சிங்க படையணியின் முழு ஒத்துழைப்புடன் பிரிகேட்கள் மற்றும் படையலகுகளுக்கு இடையிலான கபடிப் போட்டிகள் இராணுவ விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

16 ஆவது இலங்கை சிங்க படையணி கபடி அணியும் 11 ஆவது கெமுணு ஹேவா படையணி அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

56 ஆவது காலாட் படைப் பிரிவின் படையலகுகளுக்கு இடையிலான கபடி சம்பியன்ஷிப் போட்டியில் 16 ஆவது இலங்கை சிங்க படையணி வெற்றி பெற்றது.

56 ஆவது காலாட் படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் எஸ். கஸ்தூரி முதலி இந்தப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.










# தென்கிழக்கு பல்கலை ஊழியர் சங்கம் மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்தது!

## ஏனைய அமைப்புகள் ஆதரவு தராமை தொடர்பில் கவலை

(எம்.எம்.றம்ஸீன் நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்)

கடந்த 26 நாள்களாகத் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க போராட்டம் நியாயமான பல கோரிக்கைகளை முன்வைத்து இடம்பெற்று வரும் நிலையில், நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர் சங்கங்கள் உள்ளிட்ட ஏனைய சங்கங்களும் பல்கலைக்கழகத்துக்கு வெளியே உள்ள பல்வேறு சங்கங்களும் அமைப்புக்களும் பத்திரிகை மாநாடுகளைகளை கூட்டி எங்களது நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவாக குரல் கொடுக்க முன்வந்தன.

இந்த நிலையில், தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர் அமைப்புக்கள் உள்ளிட்ட அமைப்புக்கள் இதுவரை பத்திரிகையாளர் சந்திப்புக்களையோ அல்லது ஆதரவான கருத்துக்களையோ வெளியிடாதது கவலையளிக்கிறது.

தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க செயலாளர் எம்.எம். முகமது காமில் இவ்வாறு தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.றி.எம். தாஜுடீன் தலைமையில் இன்று திங்கட்கிழமை பல்கலைகழக முற்றலில் இடம்பெற்ற போராட்டத்தின்போதே செயலாளர் எம்.எம். முகமது காமில் மேற்படி கருத்துக்களை முன்வைத்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஊழியர் சங்கத்தின் தலைவர் தாஜுடீன்,

26 நாள்களுக்கு மேலாக பல்கலைக்கழகங்கள் ஸ்தம்பிதுத்துள்ள நிலையில் இதுவரை அரசு எவ்வித தீர்வையும் வழங்க முன்வரவில்லை. இவ்வாறான நிலை நீடிக்குமாக இருந்தால் மாணவர்களது எதிர்காலமே பாதிக்கப்படும். இது தொடர்பில் அரசோ அல்லது மாணவர்களோ பெற்றோர்களோ தாங்களது கருத்துக்களை முன்வைக்காமல் இருப்பது ஆச்சரியமாக இருப்பதாக தெரிவித்தார்.




நாங்கள் சொகுசு தேவைகளுக்காக போராடவில்லை. எங்களது போராட்டம் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயமான கோரிக்கைக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வை கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

26 நாள்களாக நாங்கள் போராடி வரும் இவ்வாறான சூழலில் சில பல்கலைக்கழகங்களில் உள்ள மனிதாபிமானமற்ற சிலர் எங்களது நியாயமான கோரிக்கைகளை மலினப்படுத்தும் வகையில் சூசகமாக சில வேலைத் திட்டங்களை செய்ய முனைகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுகின்றன. – என்றார்.

இங்கு கருத்து தெரிவித்த ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமில்,

பல்கலைக்கழக கட்டமைப்பில் பணியாற்றுபவர்கள் என்ற ரீதியில் கல்விசாரா ஊழியர்களாகிய நாங்கள் ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஏற்படும் அநீதிகளுக்காக குரல் கொடுத்துள்ளோம். இவ்வாறான நிலையில் சிலர் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களை நாங்கள் கூட்டாக கண்டிக்கின்றோம். இவர்கள் எங்களது கஷ்ரங்களை உணர்ந்து எங்களுக்காக குரல் கொடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இன்றைய போராட்டத்தின்போதும், வாக்களிக்கப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25 வீத எம்.சி.ஏ. கொடுப்பனவை வழங்கு என்பனபோன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசு தீர்வை தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.



# வட மாகாண ஜூடோ போட்டியில் வவுனியா மாணவருக்கு பதக்கம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

48 ஆவது தேசிய ஜூடோ போட்டியை முன்னிட்டு வட மாகாணத்தில் நடத்தப்பட்ட ஜூடோ போட்டியில் வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தி கலந்து கொண்ட வவுனியா, விபுலானாந்தா கல்லூரி மற்றும் வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து கலந்து கொண்ட மாணவர்கள் பதக்கங்கள் பெற்றுள்ளனர்.

வவுனியா விபுலானந்தா கல்லூரியில் இருந்து ஆண்கள் பிரிவில் கலந்து கொண்ட

எஸ். மதுஷன், கே.டினோஜன், ஜே. டினோஜன், எஸ்.சஞ்சயன், ஆர்.விதுர்சன், எம்.பாபுஷன், பி. அக்ஷயன், வி. நிலக்ஷன், பி. மிலோஜன், டி.நாகரகா, எஸ்.துவாகரன், எஸ்.துளசிகன், எஸ்.ஸஞீதர்சன் ஆகியோரும்–

பெண்கள் பிரிவிலிருந்து கலந்து கொண்ட ஜே. ஜேசுவா, டி.மகிஷா, கே. கம்சிகா ஆகியோரும் காந்தபுரம் வாணி வித்தியாலத்திலிருந்து பெண்கள் பிரிவில் கலந்து கொண்ட வி.துஷானா, எஸ்.கேமா, ஜே.விதுஷாலினி ஆகியோரும் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.









# பா.ஜ.கவும் மோடியும் ஆட்சியில் இருக்கின்ற வரையில் மத அடிப்படையில் இடஒதுக்கீட்டுக்கு இடமளியோம்!

## அடித்துக் கூறுகின்றார் கட்சிதி தலைவர் ஜே.பி.நட்டா

லக்னோ,மே27

பிரதமர் மோடி மற்றும் பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும்வரை மத அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க அனுமதிக்கப்பட மாட்டாது என்று கட்சித் தலைவர் ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

இந்தியா முழுவதும் மொத்தமுள்ள 543 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு 7 கட்டங்களாகத் தேர்தல் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், உத்தரபிரதேசத்தின் வாரணாசியில் பா.ஜ.க. தலைவர் ஜே.பி. நட்டா இன்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். பிரசார பொதுக்கூட்டத்தில் ஜே.பி.நட்டா பேசியதாவது:–

மத அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கக்கூடாது என்று அரசமைப்பு சாசனத்தில் தெளிவாக உள்ளது. ஆனால், மதத்தின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. பிரதமர் மோடியும், பா.ஜ.க.வும் ஆட்சியில் இருக்கும்வரை மதத்தின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க அனுமதிக்கமாட்டோம். தலித்துகள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை யாரும் ஆக்கிரமிக்க நாங்கள் விடமாட்டோம். வரும் 4 ஆம் தேதி (வாக்கு எண்ணிக்கை நாள்) எதிர்க்கட்சிகளுக்கு என்ன ஆகப்போகிறது என்பதை நீங்கள் பார்ப்பீர்கள்.– இவ்வாறு அவர் கூறினார்.

# வீட்டில் கால் தடுமாறி கீழே விழுந்ததில் வைகோவுக்குத் தோளில் எலும்பு முறிவு

## சென்னை ஆஸ்பத்திரியில் அறுவை சிகிச்சை

சென்னை,மே27

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் இயக்க தலைவர் வைகோ நேற்று முன்தினம் இரவு வீட்டில் கால் தடுமாறி கீழே விழுந்ததில் அவருக்கு வலது தோளில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. இதற்காக அவருக்கு சிறிய அளவில் அறுவை சிகிச்சை செய்யப்பட உள்ளது. இந்த தகவலை வைகோவின் மகனும், ம.தி.மு.க. கட்சியின் முதன்மை செயலாளருமான துரை வைகோ தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ விரைவில் நலம் பெற வேண்டும் என்று ராமதாஸ் கூறியுள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:–

கலிங்கப்பட்டி வீட்டில் தவறி விழுந்ததில் வலது தோள்பட்டையில் ஏற்பட்ட எலும்பு முறிவுக்காக ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவுக்கு சென்னை மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்படவிருக்கிறது. வைகோ விரைவில் முழுமையாக உடல் நலம் பெற்று



அரசியல் பணியை தொடர வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். – இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பப்புவா நியூ கினியா நிலச்சரிவில் 2,000 பேர் வரை புதையுண்டனர்!



பப்புவா நியூ கினியாவில் நிகழ்ந்த மோசமான நிலச்சரிவில் 2,000 பேர் வரை மண்ணில் புதையுண்டனர் என தர்போதுசெய்திகள்வெளியாகியுள்ளன.

தென்மேற்கு வங்க கடலில், ஆஸ்திரேலியா நாட்டின் வடக்கு பகுதியில் பப்புவா நியூ கினியா நாடு உள்ளது. இதைச்சுற்றி கடல் பகுதி சூழ்ந்துள்ளதால் தீவாக கருதப்படுகிறது. இங்கு அடிக்கடி நிலநடுக்கம் , புயல்கள், எரிமலைகள் உள்ளிட்ட பேரிடர்கள் ஏற்படுவது வழக்கம். இந்தநிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (மே 26) அன்று அதிகாலை, மலைப்பகுதியில் கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டிருக்கிறது. இங்கு நிலச்சரிவு ஏற்பட்டது முதல் முறையில்லை. ஆனால் இதுபோன்ற மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டது இதுவே முதல் முறையாக பார்க்கப்படுகிறது.

அதிகாலை சுமார் 3 மணியளவில் நிலச்சரிவு ஏற்பட்டதாக் கூறப்படுகிறது. மக்கள் அனைவரும் அமைதியாக உறங்கி கொண்டிருந்த நேரம். அப்போது எதிர்பாராத இந்த நிலச்சரிவால் குறைந்த பட்சம் 6 கிராமங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. 3 கிராமங்கள் மண்சரிவுகளால் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியுள்ளன என்றும், சுமார் 150க்கும் மேற்பட்ட வீடுகள் நிலச்சரிவுக்குள் சிக்கியுள்ளன என்றும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலச்சரிவில் சிக்கி சுமார் 670க்கும் மேற்பட்டவர்கள் இறந்ததாக ஐ.நா. தெரிவித்தது.

இந்தநிலையில், பப்புவா நியூ கினியாவில் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மிகப் பெரிய நிலச்சரிவில் 2,000 க்கும் அதிகமானோர் உயிருடன் மண்ணுக்குள் புதைந்தனர் என அந்நாடு பேரிடர் மேலாண்மை துறை ஐ.நா.வுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது. மேலும், இந்த நிலச்சரிவில் கட்டடங்கள், விவசாய நிலங்கள் அழிந்துள்ளன. வாழ்வாதாரம் மற்றும் நாட்டின் பொருளாதாரம் மிகப் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளதாக அந்நாட்டு அரசு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் சுமார் 4,000 பேர் வசித்து வந்தனர் எனவும் 150 க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் மண்ணுக்குள் புதைந்திருக்கின்றன எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

‘என் உயிரைக் காப்பாற்றியதற்காக நான் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன். நான் இறந்துவிடுவேன் என்பதில் உறுதியாக இருந்தேன். ஆனால் பெரிய பாறைகள் என் மீது வீழவில்லை. கிட்டத்தட்ட எட்டு மணி நேரம் நான் பாறைக்குள் சிக்கியிருந்தேன். பின்னர் மீட்கப்பட்டேன்’ என நிலச்சரிவில் தப்பிய ஜான்சன் என்பவர் கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் குறித்து பப்புவா நியூ கினியா நாட்டின் பிரதமர் தெரிவிக்கையில் –

மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. மீட்பு படையினர் தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர். உலக நாடுகள் உதவிக்கரம் நீட்ட வேண்டும். – என்று கோரிக்கை வைத்துள்ளார்.

இதனிடையே தொடர்ந்து அந்த பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டு வருகின்றன. அத்தோடு, சேதமடைந்த சாலைகளும் மீட்பு பணிகளுக்கு இடையூறாக உள்ளன.

நிலச்சரிவினால் சுமார் 4 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்கள் நிவாரண முகாம்களில் தங்கவைப்பட்டு உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

நிலச்சரிவு நடந்த இடத்திற்கு உதவுவதற்காக விமானம் மற்றும் பிற உபகரணங்களை அனுப்பும் தயார் நிலையில் ஆஸ்திரேலியா இருப்பதாக ஆஸ்திரேலிய பாதுகாப்பு மந்திரி ரிச்சர்ட் மார்லெஸ் கூறியுள்ளார்.

பேரிடர் மீட்பு படையினரின் வருகை தாமதமாவதால், உள்ளூர் மக்கள் மீட்பு பணியில்தீவிரமாகஈடுபட்டிருக்கிறார்கள். வீடுகள் 8 மீற்றர் ஆழத்தில் புதைந்துள்ளன. அதனால் எங்கு மக்கள் புதைந்திருக்கிறார்கள் என்று தெரியாமல் மீட்புப் பணியாளர்கள் எல்லா இடங்களிலும் தோண்டத் தொடங்கியுள்ளனர். கூடுதலாக மீட்பு படையினர் தேவைப்படுகின்றனர் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

# ஹமாஸின் மூத்த அதிகாரி இஸ்ரேல் தாக்குதலில் சாவு

ஜெருசலேம்,மே27

இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஹமாசின் மேற்கு கரை தலைமையக மூத்த அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டார்.

ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் அழிக்கும் இலக்குடன் காசா மீது போர் தொடுத்துள்ள இஸ்ரேல், பெரும்பாலான பகுதிகளை தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது. இறுதி இலக்காக தெற்கு பகுதியில் உள்ள ரபாவில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர் யாசின் ரபியா கொல்லப்பட்டார் என இஸ்ரேல் பாதுகாப்பு படை இன்று அறிவித்துள்ளது. இவர் மேற்கு கரையில் ஹமாஸ் அமைப்பின் தலைமை அதிகாரியாக பணியாற்றியவர்.



உளவுத்துறை அளித்த தகவலின் அடிப்படையில் வடமேற்கு ரபாவில் உள்ள சுல்தான் என்ற பகுதியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. மேற்கு கரையில் ஹமாசின் செயல்பாடுகளை யாசின் ரபியா முழுமையாக நிர்வகித்தார். இலக்குகளுக்கு நிதியை மாற்றியதுடன், மேற்கு கரை முழுவதும் தாக்குதல் நடத்த திட்டமிட்டார் என இஸ்ரேல் பாதுகாப்பு படை அறிக்கை வெளியிட்டுள்ளது.

2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளில் ரபியா பல்வேறு தாக்குதல்களை நடத்தினார் எனவும், இதில் இஸ்ரேலிய வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனடா முரசு

பக்கங்கள் 04

திங்கட்கிழமை 27/05/2024

## பள்ளிகளில் பாலியல் கல்வி விளக்க அமர்வுக்குத் தடை!

கியூபெக்கை தளமாகக் கொண்ட பாலியல் கல்விக் குழுவை நியூ பிரன்சுவிக்கில் உள்ள பள்ளி களில் விளக்க விரிவுரைகளை வழங்குவதைத் தடைசெய் C2



# காசா தாக்குதலை நிறுத்துமாறு கனடா இஸ்ரேலிடம் கோரிக்கை

**சர்வதேச நீதிமன்றின் தீர்ப்பை இஸ்ரேல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**

**சர்வதேச நீதிமன்றின் உத்தரவிற்கு அமைய தென்காசா பிராந்தியத்தின் ரபாவில், இஸ்ரேல் படையினர் முன்னெடுத்து வரும் தாக்குதல்களை உடன் நிறுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.**

ஹமாஸ் போராளிகள் பணய கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் எனவும் காசாவில் போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

சர்வதேச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் அவர் இவ்வாறு தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச நீதிமன்றின் உத்தரவின் பிரகாரம் சர்வதேச சட்டங்களுக்கு அமைய அனைவரும் செயல்பட வேண்டும் என வும் கனடிய பிரதமர் வலியுறுத்தியுள்ளார். C2

# சாண்ட்பாயிண்ட் கடற்கரையில் மூழ்கிய இரு இளைஞர்களும் சடலங்களாக மீட்பு

ஒன்றாரியோ, சாண்ட்பாயிண்ட் கடற்கரைக்கு அருகில் நீரோட்டத்தால் நீருக்கடியில் அடித்துச் செல்லப்பட்ட இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன வின்ட்சர் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புலனாய்வாளர்களின் கூற்றுப்படி, இருவரும் நேற்று இரவு 8 மணிக்கு சற்று முன்னர் சடலங்கள் கண்டுபிடிக் கப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை – 911 இற்கு அவசர அழைப்பு வந்து ஒரு நாளுக்கு சற்று அதிகமாக – அவர்கள் காணாமல் போய்விட்டனர் எனப் புகாரளிக்கப்பட்ட நிலையில் – தேடுதல் இடம்பெற்று வந்தது.

மூன்று பேராக வந்தவர்களில் 20 வயதுடைய இருவர் செயின்ட் கிளேர் ஏரியின் நீருக்குள் நுழைந்த பின்னர் காணாமல் போயினர்.

அடுத்த நாள் கரையில் காத்திருந்த நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு வேதனை நிறைந்தது.




கடற்கரை உத்தியோகபூர்வமாக நீச்சலுக்காக மூடப்பட்டது.

கரையோரத்தின் வேலிகள் அமைக்கப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு ஆபத்துகள் குறித்து எச்சரிக்கும் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. ஜூன் நடுப்பகுதி வரை இந்த எச்சரிக்கை நீடிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர்கள் இருவரின் மரணத்தில் முறைகேடு நடந்ததாக சந்தேகம் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.





# பாலஸ்தீனிய சார்பு கூடாரங்களை அகற்றுவதற்கு ரொறன்ரோ பல்கலை இன்று வரைக் காலக்கெடு

ரொறன்ரோ பல்கலைக்கழகம், அங்கு வாரங்களுக்கு முன்பு தொடங்கி, வளாகத்தில் நடத்தப்பட்டு வரும் பாலஸ்தீனிய சார்பு முகாமுக்கு அத்துமீறல் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. எதிர்ப்பாளர்கள் இன்று மே 27க்குள் வெளியேற வேண்டும் என்று காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

"முன் வளாகம் டொராண்டோ பல்கலைக்கழகத்தின் தனியார் சொத்து" என்று அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. "கிங்ஸ் காலேஜ் சர்க்கிளில் உள்ள முன் வளாகத்தை ஆக்கிரமிப்பது பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்படவில்லை." – என்றும் கூறப்பட்டுள்ளது.

'மே 27 அன்று (இன்று) காலை 8 மணிக்குள் மாணவர்கள் அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும்' என்று அந்த நோட்டீஸில் கூறப்பட்டுள்ளது.

அதற்குள் முகாம் கலைக்கப்படாவிட்டால், "ஒன்டாரியோ உயர் நீதிமன்றத்தின் உத்தரவைப் பெறுவது உட்பட தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் எடுக்கும்" என்று பல்கலைக்கழகம் கூறியது.

மாணவர்கள் இதை கடைபிடிக்கவில்லை என்றால் இடைநீக்கம் செய்யப்படுவார்கள் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக ஊழியர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்டோர் மீதும் பணிநீக்கம் உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 2 முதல் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் முகாமிட்டுள்ளனர்.

மாணவர்களுக்கான துணைத் தலைவர் சாண்டி வெல்ஷ் ஏப்ரல் 28 அன்று (அதாவது நாளை முதல்) முகாம்கள் அத்துமீறலாகக் கருதப்படும் எனக் கூறி எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்

"பல்கலைக்கழஜத்தின் கொள்கைகள் மற்றும் சட்டத்தின் வரம்புகளுக்குள் ஒன்றுகூடுவதற்கும் எதிர்ப்பு தெரிவிப்பதற்கும் எங்கள் உறுப்பினர்களின் உரிமைகளை பல்கலைக்கழகம் மதிக்கிறது" என்று திருமதி வெல்ஷ் குறிப்பிடுகின்றார்.

"முகாம்கள் அமைத்தல் அல்லது பல்கலைக்கழக கட்டடங்களை ஆக்கிரமித்தல் போன்ற அங்கீகரிக்கப்படாத நடவடிக்கைகள் அத்துமீறலாகக் கருதப்படுகின்றன. பல்கலைக்கழக கொள்கைகள் அல்லது சட்டத்திற்கு முரணான அங்கீகரிக்கப்படாத நடவடிக்கைகள் அல்லது நடத்தைகளில் ஈடுபடும் எந்தவொரு மாணவரும் விளைவுகளுக்கு உட்படலாம்.

**கனடா முழுவதிலுமே பல்கலை எதிர்ப்புகள்**

டொராண்டோ பல்கலைக்கழகம் பாலஸ்தீனிய ஆதரவு முகாம்களைக் கையாளும் நாட்டில் உள்ள ஒரே உயர் கல்விக் கூடம் அல்ல. பல உயர்கல்விக் கூடங்களில் இப்பிரச்சினை உள்ளது. Université du Québec à Montréal மே 12 ஆம் திகதி முகாமை அமைத்த எதிர்ப்பாளர்களுக்கு எதிராக ஒரு தடை உத்தரவுக்கு விண்ணப்பித்துள்ளது. வளாகக் கட்டடங்களில் இருந்து மூன்று மீட்டருக்குள் போராட்டக்காரர்கள் கூடாரங்கள் மற்றும் பிற பொருள்களை வைப்பதைத் தடுக்குமாறு கியூபெக் உயர் நீதிமன்றத்தை அது கேட்டுள்ளது.

ஆல்பர்ட்டாவில், கல்கரி மற்றும் எட்மண்டன் ஆகிய இரு பகுதிகளிலும் உள்ள பொலிஸார் நகர பல்கலைக்கழக மைதானத்தில் இருந்த போராட்ட முகாம்களை அகற்றியுள்ளனர்.

மே 9 அன்று, கல்கேரி பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து தானாக முன்வந்து வெளியேறாத போராட்டக்காரர்களின் முக்கிய குழுவை நகர்த்துவதற்கு, கண்ணீர்ப்புகை மற்றும் ஃப்ளாஷ்-பேங் கையெறி குண்டுகளை பொலிஸார் பயன்படுத்தினர்.

குழு "புராஜெக்டைல்ஸ் மற்றும் தாக்குதல் நடத்தையை" பயன்படுத்தியது. இதற்கு அதிகாரிகளிடமிருந்து பலம் தேவைப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.தில் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இரண்டு நாள்களுக்குப் பிறகு, எட்மண்டனில் உள்ள பொலிஸார் எதிர்ப்பாளர்களை ஆல்பர்ட்டா பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து அகற்றினர்.

ஆல்பர்ட்டா பல்கலைக்கழகத்தின் தலைவர் பில் ஃபிளனகனின் அறிக்கையில், தீ ஆபத்துகள் மற்றும் வன்முறை அபாயம் ஆகியவற்றைத் தவிர்ப்பதே பொலிஸ் ஈடுபாட்டிற்கு ஒரு காரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மெக்கில் பல்கலைக்கழகம் அதன் வளாகத்தில் உள்ள முகாம்களை அகற்ற நீதிமன்ற உத்தரவை நாடுகிறது. ஒரு நீதிபதி கோரிக்கையை நிராகரித்தாலும், அதன் கோரிக்கையை மாற்றி மீண்டும் சமர்ப்பிக்க மெக்கிலுக்கு நீதிமன்றம் கால அவகாசம் அளித்தது.

## பள்ளிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறார் என மாகாண முதல்வர் பிளேன் ஹிக்ஸ் அறிவித்துள்ளார்.

பல நியூ பிரன்சுவிக் உயர்நிலைப் பள்ளிகளில் கொடுக்கப்பட்ட விளக்கக் காட்சியில் தனது அதிருப்தியை வெளிப்படுத்தி, பிரதமர் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளார்.

"நான் கோபமாக இருக்கிறேன் என்று சொல்வது முற்றிலும் குறைத்து மதிப்பிடலாக இருக்கும்," என்று அவர் கூறினார்.

"இந்த விளக்கக்காட்சி நியூ பிரன்சுவிக் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இல்லை. அத்தோடு, பெற்றோர்களுக்காக உள்ளடக்கம் முன்கூட்டியே கொடுக்கப்படவில்லை." – என்றும் அவர் குறை கூறியிருக்கின்றார்.



# ஸ்குவாமிஸ் விமான விபத்து இரண்டு பேர் உயிரிழந்தனர்

பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஸ்குவாமிஸ் பகுதியில் இடம்பெற்ற விமான விபத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகின.

இந்த விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

அப்பகுதியில் இலகுரக விமானம் ஒன்று கடந்த வெள்ளியன்று விழுந்தமை பற்றிய எச்சரிக்கைத் தகவல் மட்டுமே முதலில் கிடைத்தன. விமானத்தின் ரகம், அதில் இருந்தவர்கள் பற்றிய எந்த விவரமும் ஆரம்பத்தில் தெரிய வரவில்லை.

விசாரணையின் ஒரு பகுதியாக தேடுதல் மற்றும் மீட்பு குழுக்கள் மற்றும் கூட்டு மீட்பு ஒருங்கிணைப்பு மையம் ஆகியன இணைந்து செயல்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து நடந்த தொலைதூரத் தளத்தை அணுகுவதில் உள்ள சவால்கள் காரணமாக, விபத்துப் பற்றிய எந்த விவரங்களையும் பொலிஸாரால் உடனடியாக உறுதிப்படுத்த முடியவில்லை என்று பொலிஸாரின் அறிக்கையில் கூறப்பட்டது.




எனினும் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் விபத்து இடம்பெற்ற பகுதிக்கு மீட்புப் பணியாளர்கள் சென்றடைந்தனர் என இப்போது தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்திற்கான காரணம் குறித்து இன்னும் கண்டறியப்படவில்லை எனவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விமான விபத்து இடம்பெற்ற பகுதியில் சீரற்ற காலநிலை நீடித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் பற்றிய விவரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.




# கனடாவில் எல்லைப் பாதுகாப்பு ஒழுங்கு மேம்படுத்தப்பட வேண்டுமென பரிந்துரை

கனடாவில் எல்லை பாதுகாப்பு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு புலனாய்வு பிரிவின் நடவடிக்கைகளை மீளாய்வுக்கு உட்படுத்தி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அதிகாரிகளுக்கு உரிய பயிற்சி வழங்கப்படாமை ஓர் முக்கிய பிரச்சினையாக காணப்படுகிறது என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விசேடமாக எல்லைப் பாதுகாப்புப் புலனாய்வுத் தகவல்கள் தொடர்பில் தற்பொழுது நடைமுறையில் உள்ள முறைமைகள் போதுமானவையல்ல எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எல்லைப் பாதுகாப்பு புலனாய்வு பிரிவு ஆயுதக் கடத்தல் முதல் மனித கடத்தல் வரையிலான பல்வேறு விடயங்களைத் தடுத்து நிறுத்தும் முனைப்புகளில் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறான ஒரு பின்னணியில் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துதலும் தொழில்நுட்ப பயன்பாடு குறித்த பயிற்சிகளை வழங்குதலும் அவசியமானவை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புலனாய்வுத் தகவல்களை திரட்டுதல் மற்றும் அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளில் முன்னேற்றம் தேவைப்படுவதாகவும் நடைமுறையில் காணப்படும் வழிமுறைகள் மேம்படுத்தப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



# கனடாவின் மிகவும் பாதுகாப்பான முதல் பத்து நகரங்களின் விவரம்!

கனடாவின் மிகவும் பாதுகாப்பான நகரங்கள் பற்றிய விவரம் வெளியாகியிருக்கின்றது.

ஒரு நகரில் வதிவதற்கு அல்லது விடுமுறையை கழிப்பதற்காக செல்வதற்கு குறித்துத் தீர்மானிக்கும் போது பல்வேறு விடயங்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

அவ்வாறான ஏதுக்களில் அந்த நகரின் பாதுகாப்பு நிலைமைகளும் முக்கியமானவை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் கனடிய புள்ளிவிவரவியல் திணைக்களம் நாட்டின் மிகவும் பாதுகாப்பான நகரங்கள் பற்றிய பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

நகரங்களில் இடம்பெறும் குற்றச் செயல்களின் தீவிரதன்மையை அடிப்படையாகக் கொண்டு தர வரிசை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான மிகவும் பாதுகாப்பான நகரங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தின் ஓக் பே நகரம் மிகவும் பாதுகாப்பான நகரங்களின் வரிசையில் முன்னணி வகிக்கின்றது.

சிறிய நகரமான இந்த நகரில் குற்றச் செயல்களின் தீவிரத்தன்மை 27.5 புள்ளிகள் என்ற அடிப்படையில் காணப்படுகின்றது. அடுத்த நகரமாக கியூபெக்கின் பிலெய்ன்வில் நகரம் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த நகரின் குற்றச் செயல்களின் தீவிரத்தன்மை புள்ளிகள் 28.3 எனப் பதிவாகியுள்ளது.

மூன்றாவதாக ஒன்றாரியோ மாகாணத்தின் அரோரா நகரம் பட்டியலிடப்பட்டுள்ளதுடன், இதன் புள்ளிகள் 34.2 என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஓக் பே, கியூபெக்கின் பிளெய்ன்வில், ஒன்றாரியோவின் அரோரா, ஒன்றாரியோவின் லாசெல், ஒன்றாரியோவின் புர்லிங்டன், கியூபெக்கின் லிவைஸ், ஒன்றாரியோவின் மார்க்கம், கியூபெக்கின் கியூபெக் நகரம், ஒன்றாரியோவின் ரிச்மன்ட்ஹில் மற்றும் ஒன்றாரியோவின் ஒட்டாவா ஆகிய நகரங்கள் முறையே முதல் பத்து பாதுகாப்பான நகரங்களாக பட்டியலிடப்பட்டுள்ளன.







# நியூ பிரவுன்ஸ்விக்கில் விபத்தில் மூவர் சாவு!

கனடாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கனடாவின் நியூ பிரவுன்ஸ்விக் பகுதியின் செடியெக் பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் பதிவாகியுள்ளது.

நூறு அடி உயரமான அணைக்கட்டு ஒன்றிலிருந்து வாகமொன்று கீழே வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த 54 வயதான நபர் ஒருவரும், அப்பர் ரெக்ஸ்டனைச் சேர்ந்த 51 யதான நபர் ஒருவரும் 25 வயதான பெண் ஒருவரும் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் பிரதே பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.